# நியாயமான தொழிலாளர் சட்டம்

தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகளில் தொழிலாளர்களின் உரிமைகளைப் பேணுவதற்கான தரநிலைகளை நியாய உழைப்பு சங்கத்தின் (FLA) நியாய உழைப்பு விதிமுறைகள் வரையறுக்கின்றன. நியாயமான தொழிலாளர் சட்டம், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தர நிலைகள் மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்டது. தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கும், தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகளை வேலை செய்யச் சிறந்த இடங்களாக மாற்றுவதற்கும், FLA -இன் உறுப்பினர் நிறுவனங்கள் தங்களின் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் இந்தப் பணியிடத் தரநிலைகளை நிலைநிறுத்த ஒப்புக்கொள்கின்றன.

Fair Labor

| சட்டக் கூறு | தரநிலை |
|---|---|
| **வேலைவாய்ப்பு உறவு** | தொழில் உரிமையாளர்கள், தொழிலாளர்களை மதிக்கக்கூடிய, குறைந்தபட்சம் தேசிய, சர்வதேச தொழிலாளர் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வேலைவாய்ப்பு விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். |
| **பாகுபாடின்மை** | பாலினம், இனம், மதம், வயது, மாற்றுத்திறன், பாலியல் நிலைப்பாடு, தேசியம், அரசியல் கருத்து, சமூகக் குழு அல்லது இனப் பூர்வீகம் ஆகியவற்றின் அடிப்படையில், பணியமர்த்தல், ஊதியம், பதவி உயர்வு, ஒழுங்கு நடவடிக்கை, பணிநீக்கம் அல்லது ஓய்வு உள்ளிட்ட வேலைவாய்ப்பில் எந்தவொரு நபரும் பாகுபாட்டிற்கு உள்ளாக்கப்படக்கூடாது. |
| **துன்புறுத்தல் அல்லது வன்முறை** | ஒவ்வொரு ஊழியரும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்தப்பட வேண்டும். எந்தவொரு ஊழியரும் உடல், பாலியல், உளவியல் அல்லது வாய்மொழித் துன்புறுத்தல் அல்லது வன்கொடுமைக்கு ஆளாகக் கூடாது. |
| **கட்டாய வேலை** | சிறை வேலை, கட்டாய ஒப்பந்தத் தொழிலாளர் முறை, கொத்தடிமை முறை அல்லது பிற வகை கட்டாய வேலைகள் உட்பட, கட்டாய வேலையை எந்த விதத்திலும் பயன்படுத்தக்கூடாது. |
| **குழந்தைத் தொழிலாளர்** | 15 வயதுக்குக் குறைவான அல்லது கட்டாயக் கல்வி நிறைவு செய்ய வேண்டிய வயதுக்குக் குறைவான எந்தவொரு நபரும் பணியமர்த்தப்படக் கூடாது, இதில் எது அதிகமோ அது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். |
| **சங்கம் அமைக்கும் சுதந்திரம் மற்றும் கூட்டுப் பேரம் பேசுதல்** | தொழில் உரிமையாளர்கள், ஊழியர்களின் சங்கம் அமைக்கும் சுதந்திரம் மற்றும் கூட்டுப் பேரம் பேசும் உரிமையை அங்கீகரித்து மதித்து நடக்க வேண்டும். |
| **சுகாதாரம், பாதுகாப்பு, மற்றும் சுற்றுச்சூழல்** | வேலை செய்வதனால் எழக்கூடிய, அதனோடு தொடர்புடைய அல்லது தொழில் உரிமையாளரின் இடத்தில் செயல்படுவதன் விளைவால் ஏற்படுகின்ற விபத்துகள் மற்றும் காயங்களைத் தடுப்பதற்காக, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச்சூழலை தொழில் உரிமையாளர்கள் வழங்க வேண்டும். பணியிடங்கள் சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் எதிர்மறையான தாக்கங்களைக் குறைப்பதற்கு, தொழில் உரிமையாளர்கள் பொறுப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| **வேலை நேரம்** | பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ள நாட்டின் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட வழக்கமான மற்றும் கூடுதல் வேலை நேரத்தைவிட அதிகமான நேரம் வேலை செய்யுமாறு தொழில் உரிமையாளர்கள் பணியாளர்களைக் கட்டாயப்படுத்தக்கூடாது. வழக்கமான வேலை நேரம் வாரத்திற்கு 48 மணி நேரத்தைவிட அதிகமாக இருக்கக்கூடாது. தொழில் உரிமையாளர்கள் ஏழு நாட்களுக்கு ஒருமுறை தொழிலாளர்களுக்குக் குறைந்தது 24 மணிநேர தொடர்ச்சியான ஓய்வை அனுமதிக்க வேண்டும். அனைத்து கூடுதல் நேர வேலையும் இரு தரப்பினரின் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். தொழில் உரிமையாளர்கள் வழக்கமாகக் கூடுதல் நேர வேலையைக் கோரக் கூடாது. மேலும் அனைத்துக் கூடுதல் நேர வேலைக்கும் பிரீமியம் விகிதத்தில் ஊதியம் வழங்க வேண்டும். சிறப்புச் சூழ்நிலைகளைத் தவிர, ஒரு வாரத்தில் வழக்கமான மற்றும் கூடுதல் வேலை நேரத்தின் மொத்த நேரம் 60 மணி நேரத்தைவிட அதிகமாக இருக்கக்கூடாது. |
| **இழப்பீடு** | ஒவ்வொரு தொழிலாளருக்கும், தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், ஓரளவு தன்னிச்சையான வருமானத்தைப் பெறுவதற்கும் போதுமான, ஒரு வழக்கமான வேலை வாரத்திற்கான ஊதியத்தைப் பெறும் உரிமை உண்டு. தொழில் உரிமையாளர்கள், குறைந்தபட்ச ஊதியம் அல்லது பொருத்தமான நடைமுறை ஊதியம், இவற்றில் எது அதிகமோ அதை வழங்க வேண்டும். ஊதியம் தொடர்பான அனைத்து சட்டத் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். மேலும் சட்டம் அல்லது ஒப்பந்தத்தின்படி கோரப்படும் பலன்களை வழங்க வேண்டும். ஊதியம் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல், அவர்களுக்குச் செலவு செய்யக்கூடிய வருமானத்தை வழங்கத் தவறும்போது, ஒவ்வொரு தொழில் உரிமையாளரும் FLA உடன் இணைந்து, தொழிலாளர்களுக்குப் போதுமான ஊதியம் வழங்கப்படும் நிலையை படிப்படியாக அடைவதை நோக்கமாகக் கொண்டு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

D2026